செ.வெ.எண்: 161/2020 நாள்: 20.03.2020

# திருவண்ணாமலை மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு குறித்து பள்ளிவாசல்கள், தேவாலயங்கள், சமண கோயில்களின் நிர்வாகிகளுடன் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் கலந்துரையாடல்...

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று (20.03.2020) கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து பள்ளிவாசல்கள், தேவாலயங்கள், சமண கோயில்களின் நிர்வாகிகளுடன் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு. பொ. ரத்தினசாமி, உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி. மந்தாகிணி, அனைத்து பள்ளிவாசல்கள், தேவாலங்கள், சமண கோயில்களின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மாவட்ட ஆட்சியர் அவர்கள் கூட்டத்தல் பேசியதாவது ‘திருவண்ணாமைலை மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவது குறித்து முஸ்லீம்கள், கிறஸ்தவர்கள், ஜெயின் ஆகிய சமுதாயத்தினருடன் கலந்துரையாடல் நடைபெறுகிறது. கொரோனா வைரஸ் உச்சகட்ட தாக்குதல் பல்வேறு நாடுகளில் ஏற்படுத்தி அதனால் ஆயிரக்கணக்கான மனித உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளது. பல்வேறு நாடுகளின் பொருளாதாரம், வளர்ச்சி வீழ்ச்சி அடைந்துள்ளது. சீனா, அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள், ஆப்பிரக்க நாடுகள் மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளையும் கொரோனா வைரஸ் தாக்கி வருகிறது. கொரோனா வைரஸ் நுழைந்த நாடுகள் அமைதியான முடிவை சந்திக்கவில்லை. உலகிலேயே வளர்ச்சி அடைந்த நாடு, அனைத்து மருத்துவ வசதிகளும் உள்ள நாடான அமெரிக்காவில் 300-க்கும் மேற்பட்டோர் கொரோனா வைரஸ் நோயினால் பலியாகியுள்ளார்கள்.

இந்தியாவில் தற்போது தான் கொரோனா வைரஸ் புகுந்து இருக்கிறது. இதன் பாதிப்பு எப்படி இருக்கும் என்று நமக்கு தெரியவில்லை. பாதிப்பு ஏற்பட்டால் அதற்கான மருத்துவமனை, மருத்துவர்கள், மருந்துகள் தற்போது இருக்கும் நிலையில் போதுமானதாக இல்லை. முகம் மாஸ்க், கை கழுவும் திரவம் போன்றவை தட்டுப்பாடு ஏற்படும். இதற்காக அரசு பல்வேறு கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் தினந்தோறும் எடுத்து வருகிறது. வளர்ச்சி அடைந்த நாடான அமெரிக்காவில் நியூயார்க், சான்பிரான்சிஸ்கோ ஆகிய மாகானங்கள் முழுமையாக மூடப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் சாதாரணது கிடையாது, ஒரு தாக்கத்தை ஏற்படுத்திவிட்டு செல்லும். இந்த பாதிப்பிதிலிருந்து நாம் நம்மை எப்படி தற்காத்து கொள்ள வேண்டும் என்பது அவசியம். இந்தியாவில் அதிக பாதிப்பில்லை, இது வரை கொரோனா வைரஸ் நோய் காரணமாக 4 மனித உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளது, இதனால் தற்போது முன்னெச்சரிக்கை தேவை.

கொரோனா வைரஸ் நோய் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு எளிதாக பரவக் கூடிய நோய் கொரோனா வைரஸ் நோய், இந்த வைரஸ் 28 நாள் உயிரோடு இருக்கும். இதை தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை, திரையரங்குகள், பெரிய வணிக வளாகங்கள் மூடப்பட்டுள்ளது, பேருந்துகள் குறைக்கப்பட்டு வருகிறது. வெளிநாட்டில் உள்ளவர்கள் இங்கு வருவதற்கு தடை விதக்கப்பட்டுள்ளது. பெரிய அளவிலான அபாயாகரமான சூழ்நிலை நோக்கி போகாமல் இருப்பதற்கு இது போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. அரசு 31.03.2020 வரை கோயிலுக்கு பக்தர்கள் செல்லக்கூடாது என முதல் முறையாக அறிவுறுத்தியுள்ளது. சந்தைகள், மருத்துமனை பார்வையாளர்கள் ரத்து செய்யப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் நோயினால் வயதானவர்கள் பாதிக்கப்பட்டால் அதற்கு மறுவாழ்வு கிடையாது. இதற்காக திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிவாசல்கள், தேவாலயங்கள், சமண கோயில்களில் பொதுமக்கள் வழிபாடு செய்வதை தள்ளி வைப்பதற்காக உங்களின் கருத்துக்களை தெரிவிக்கலாம்’ என்றார்.

மாவட்ட ஆட்சியர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில் 'திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளி வாசல்கள், தேவாலயங்கள், சமண கோயில்களின் நிர்வாகிகளிடம் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. இதில் அனைத்து மதத்தினரும் ஒருமித்த கருத்தாக 31.03.2020 வரை பொதுமக்கள் வழிபாடுகள் இருக்காது என தெரிவித்தனர்' என்றார்.

முன்னதாக மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஆரணி நகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை, ஆரணி நகராட்சி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆகிய துறைகளி சார்பாக கொரோனா வைரஸ் தடுப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பொதுமக்களுக்கு கை கழுவும் முறைகள் குறித்து பேருந்த நிலையத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள கை கழுவும் இடத்தில் செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. மேலும், பேருந்துகளில் கிருமினி நாசினி மருந்துகள் தெளிக்கப்பட்டு, பேருந்து பயணிகளின் உடல் வெப்பநிலை பரிசோதனை செய்யப்பட்டது. மாவட்ட ஆட்சியர் அவர்கள் பொதுமக்களுக்கு கொரோனா வைரஸ் தடுப்பு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கி, பேருந்துகளில் விழிப்புணர்வு ஸ்டிக்கர் ஒட்டினார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.**